மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : வியாபாரிகளும் இதோடு தொடர்பு கொண்டிருந்தார்களா, இல்லையா என்பது தெரியவில்லை. மதுக்கரை அருகே கேரள போலீஸைச் சேர்ந்த சங்கரன்குட்டி நாயர்—உதவி சப் இன்ஸ்பெக்டர், நாராயணன் நாயர்—ஹவில்தார், சந்திரசேகர வாரியார்—தலைமைக் காவலர், பேபி பால் ராஜ்—காவலர் ஆகியோர் ஷண்முகா ரைஸ் மில்லி லிருந்து 8 மூட்டை அரிசி, 2 சிறிய மூட்டை அரிசி இவைகளை வாங்கி ஏற்றிக்கொண்டு போகிறார்கள் என்ற தகவல் கிடைத்தது, உடனே நம்முடைய போலீஸ் அதிகாரிகள் சென்று அவர்களைப் பிடித்திருக்கிறார்கள். அங்கிருந்த போலீஸ் டெப்டி சூப்பரின் டெண்டெண்டு அவர்களை ஜாமீனில் விடுத்திருக்கிறார். சொந்த உபயோகத்திற்கு வாங்கினார்களா, அல்லது இம்மாதிரி எப்பொழுதும் செய்கிறார்களா என்ற நிலைமை பரிசீலனையில் இல்லை.

போக்குவரத்து நிறுவனங்களுக்கு நிதி உதவி

***178 வினா—திரு. என். டென்னிஸ் :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்திலுள்ள போக்குவரத்து நிறுவனங்கள், மத்திய அரசால் நிறுவப்பட்டுள்ள போக்குவரத்து நிதிக் கழகத்தை, நிதி உதவி வேண்டி, 1972-73-ம் ஆண்டுகளில் அணுகி யுள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

சென்னை-போந்தவாக்கம் பேருந்து வழித்தடம்

***179 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்கு வரத்துக் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து போந்தவாக்கம் செல்லும் வழித் தடம் எண் 111-பி பேருந்தினை சூரப்பூண்டி, சாணாப்புத்தூர் கிராமங்களின் வழியே திருப்பிவிடும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், இது எப்போது நிறைவேற்றப்படும் ?